விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 | தை 25 | ஜ- அவ் 16 | இதழ் 354
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 7 2 1985

## நேற்றையச் சம்பவம்:
## ஐவர் பலி! பலர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை இராணுவத்தினரின் தேடுதல் சம்பவத்தின்போது நால்வர் பலியானுர்கள் இச்சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பதட்ட நிலையின் போது வான் விபத்தில் ஒருவர் பலியானுர். பலர் காயமடைந்தனர்.

ஒடைக்கரையில் பொறியியலாளர் எம். டி. இம்மனுவேல் [48 வயது) ஈச்சமட்டையில் பிலிக்ஸ் அந்தோணிப்பிள்ளை (25 வயது), கொழும்புத்துறையில் சுப்பிரமணியம் சிவகுருநாதன் [54 வயது], பி. பூபாலசிங்கம் [64 வயது] கொய்யாத் தோட்டம் ஆகியோர் பலியானுர்கள்.

வான் விபத்தில் விபத்மரூடன் (20 வயது) பலியானுர்.

நல்லூரைச் சேர்ந்த செல்லையா குகதாஸ் [43 வயது] கரவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிங்காரம் [53

(6-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க]

# தொண்டமானின் அறிக்கைகள்
# பாரதூரமானவை அல்ல!

## சில வரிகளே காரமானவை என்கிருர் அமைச்சர் அல்விஸ்

(கொழும்பு)

"இனப் பிரச்னை தொடர்பாக அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் விடுத்துவரும் அறிக்கைகளில் ஒரு சில வரிகள் காரமானதாக இருந்தாலும்; அறிக்கைகள் பாரதூரமானதாக இருக்கவில்லை'' என்று ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார்.

இனப்பிரச்னையைத் தீர்க்க ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் உதவியாகவே இருந்துவருகிருர் என்றும் அமைச்சர் அல்விஸ் கூறினுர்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் வாராந்தக் கூட்டத்தின் பின்னர் திரு அல்விஸ் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினுர்.

அமைச்சர் திரு. தொண்டமானின் அறிக்கைகள் குறித்து பத்திரிகையாளர்கள் கேட்ட

(6ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க]

## 'யாழ் தேவி' வவனியாவரை வரும்!

(கொழும்பு)

இதுவரை அநுராதபுரம்

[6ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## நேற்று மாலைச் சம்பவம்
## ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை ஆறரை மணியளவில் யாழ் நகரில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் யாழ. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் சிலநிமிடத்தில் மரணமானுர். யாழ். பிரதான வீதியில் 'வாடிவீடு'க்கு அருகாமையில் இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

இறந்தவர் மானிப்பாயைச் சேர்ந்த ரி. ரி. ராசதுரை (33 வயது) என்று அடையாளம் காணப்பட்டார்.

## கார்ச் சாரதி இராமசாமி
## மரணவிசாரணை நடக்கவில்லை
## சடலம் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரிக்கு இம்மாதம் 4ம் திகதி அதிகாலை கர்ப்பிணிப்பெண் ஒருவரை காரில் கொண்டு வந்தபோது

(6ம் பக்கம் 5ம் கலம் பா க்க)

## தொழிலாளர் இன்று அடையாள வேலைநிறுத்தம்

(கல்வியங்காடு)

யாழ் மாநகரசபை மராமத்துப் பகுதி வீதித்தொழிலாளர்கள் இன்று முழுநாள் வேலைநிறுத்தத்தில்ஈடுபடவுள்ளனர்.

இடைக்கால முற்பணம் பெறுவதற்காக இத்தொழிலாளர்கள் நேற்று மாநகரசபை வளவுக்குள் கூடிநின்ற பொழுது சகதொழிலாளி ஒருவர் மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவரால் காரணமின்றி தாக்கப்பட்டதாகவும், அதற்கு ஆட்சேபம் தெரிவித்தே அடையாள வேலைநிறுத்தம் நடைபெறவுள்ளதாகவும் தெரியவருகிறது

(ரா)

## செய்தித் தணிக்கை!

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்த 1ம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை தொடர்ந்து அமுலிலுள்ளது.

பயங்கரவாதத்தை அடக்குவதற்கு எடுக்கப்படும் செய்திகள், தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் கட்டுப்பாடு, அவசிய தேவைப் பொருட்கள் விநியோகம் என்பவற்றுக்கு குந்தகம் விளைவிக்கும்செய்திகள் அனைத்தும் தகுதி வாய்ந்த அதிகாரியின் அனுமதியுடனே பே 'ஈழநாடு'வில் பிரசுரிக்கப்படுகின்றன.

## ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கத்தில்
## ரூபா 3 லட்சம் கொள்ளை!

(வேலணை)

ஊர்காவற்றுறை ப, நோ. கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திலிருந்து 3 லட்சம் ரூபாவை இனம்தெரியாத இளைஞர்கள் துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது

இரு கார்களில் வந்த இனம் தெரியாத இளைஞர்கள் நேராக சங்கக் காசாளரிடம் சென்று அவர் வைத்திருந்த இப்பணத்தைக் கொள்ளையடித்ததுடன், அவரின் தேவைக்கென வேறு இடத்தில் அடைவுவைக்கவென வைத்திருந்த நகைகள் சிலவற்றையும் கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறப்பட்டது

[6-ம் பக்கம் 3ம்-கலம் பார்க்க]

## திருமலை, கல்பிட்டியில்
## நூறு குடும்பங்கள் குடியமர்த்தப்படும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய குடியேற்றத்திட்டத்தைத் தொடர்ந்து திருகோணமலையிலும் கல்பிட்டியிலும் நூறு குடும்பங்கள் குடியமர்த்தப்படவுள்ளன

முன்னோடியாக முதலில் திருகோணமலையில் பத்துக் குடும்பங்கள் குடியமர்த்தப் படுவார்கள்.

இதே நேரத்தில்; கொக்கிளாய், நாயாறு ஆகிய பகுதிகளிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் அங்கு குடியமர்த்துவது பற்றியும் அவர்களின் தொழில் நிலைமை குறித்தும் நான்கு அமைச்சுகளின் அதிகாரிகள் இப்பொழுது ஆராய்ந்து வருகின்றனர்,

## அகதிகளுக்கு ஒன்றியம் உதவி

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு அகதிகளுக்கு உதவும் பணியில் உயர்நிலை மாணவர் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்கான ஒன்றியம் முல்லைத்தீவில் முகாம்களிலிருக்கும் அகதிகளின் நிவாரணத்துக்காக பொருட்களும் நிதியும் சேகரித்து வருகிறது

## 'மோசடி' ஏஜென்ஸிகளுக்கு கடுமையான தண்டனை!

[கொழும்பு]

வெளிநாடுகளில் வேலைபெற்றுத்தருவதாகக் கூறி மக்களை

(6-ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

# நீதிமன்றங்களுக்கு தொடர்ந்து செல்வதில்லை:
# யாழ். சட்டத்தரணிகள் முடிவு!

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றங்களுக்கு இரு வாரங்கள் செல்வதில்லை என்று யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் சங்கங்கள் நேற்றுஏகமனதாகத் தீர்மானித்துள்ளன

யாழ். சட்ட நூலகத்தில் யாழ். சட்டத்தரணிகள் சங்கங்கள் சங்கத்தலைவர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நேற்றுக் காலை நடந்த விசேட கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 47 சட்டத்தரணிகள் கலந்து கொண்டனர்.

தற்போதுள்ளநிலைமைபற்றி சட்டத்தரணிகள் எடுத்துக் கூறினுர்கள்.

இம்மாதம் 20ம் தேதி கூடி முடிவு எடுப்பதென்றும் அதுவரை தற்போதுள்ளதுபோல் நீதிமன்றங்களுக்கு செல்லாமலிருப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (க)

# அசி ஜளம்பரம்

## விற்பனைக்கு

பல்வேறு கவர்ச்சிகர நிறங்களில் அழகானதும், நீடித்துப் பாவிக்கக் கூடியதுமான கண்ணுடிஇழையாலான குசினி பேசின் (Sink). Drain Board உடன் விற்பனைக்குண்டு. விலை 750/- ரூபா மட்டுமே ட்ரேட் சென்ரர், ஹோம் பிறைன்ஸ் லிமிட்டட், 155 மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 1484

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் 1709

புதிய N. V. 300 வீடியோ டெச் விற்பனைக்கு உண்டு 184 A நாவலர் ரோட், யாழ்ப்பாணம்

1704

C 90 Honda-1984 மொடல், புதிய சிறிது பாவிக்கப்பட்ட மோட்டார் சயிக்கிள் உடன் விற்பனைக்குண்டு. 28, 3ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். 1705

## வாடகைக்கு

கள்ளியங்காட்டுச் சந்தையில் கடை வாடகைக்கு உண்டு. களஞ்சியமாகவும் உபயோகிக்கலாம். விபரங்கட்கு: 1699, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1699

## கல்வி

தனிப்பட்டவர்களுக்கும், குழுவினருக்கும் தகைமை பெற்ற பொறியியலாளரால் C. E. I. பகுதி I லண்டன் and இலங்கை, City and Guilds (மின்னியல்). லண்டன், இலங்கை க. பொ. த. உயர்தரம், மற்றும்க பொ. த. (சாதாரணம்) வகுப்புகளுக்குத் துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறும். குறிப்பிட்ட அளவு இடங்கள் மட்டும் உண்டு. விபரங்களுக்கு: 46, ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 1703

## காணவில்லை

03-02-85ந் திகதி நியூ கல்யாணி ஜுவலர்ஸ் நகை மாளிகை கன்னுதிட்டியில் இருந்து சிறுவன் [illegible]ரகுவைக் காணவில்லை உயரம் 3½ அடி. கடைசியாக இளம் சிகப்பு பிஜாமா சாரமும், பிறவுண் கலரில் சேட்டும் அணிந்திருந்தார். தலைமுடி கட்டையாக வெட்டியுள்ளார். அவர் பற்றி தகவல் கொடுப்போர் மேல் உள்ள விலாசத்திற்கு தெரிவிக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். தொலைபேசி இல: 24005. (1713)

## தேவை

நல்ல நிலையில் அல்லது புதிய விற்பனைக்குள்ள ''டீ'' பிறிஜ் (Deep Freezer) தேவையாகவுள்ளது. தொடர்பு சிமாட்டி, 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1706

வியாபார ஸ்தாபனங்களில் கடமைசெய்த அனுபவமிக்க பார்சல் கட்டக்கூடிய ஆண்பாலார் தேவை நமது வவனியாக் கிளையில் வேலை செய்ய உடனடியாக ஆள் தேவை. முப்பது வயதுக்கு மேற்பட்டவர் விசேஷமாக விரும்பத்தக்கது நமது யாழ் கிளை, 104, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஆபீசில நேர்முகப்பரீட்சைக்கு முன் வேலைபார்த்த இடங்களின் சான்றிதழ், கிராமசேவகர் கடிதம். மற்றும் அதிமுக்கிய தஸ்தாவேஜுகளுடன் 09-02 85 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சமுகமளிக்கவும். நிர்வாகஸ்தர். 1711

யாழ். நகரில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட நல் ஒழுக்கம் உள்ள மின்பொறி, பைப் உபகரணங்கள் விற்பனையாளராகவும், ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவராகவும், மேலதிக வியாபார அனுபவம் உள்ளவராகவும், யாழ். நகரிலிருந்து 5 மைல்கள் சுற்றுடல்களுக்குள் வசிப்பவராகவும் முன்வேலை அனுபவத்துடன் எழுத்துமூலம் 18-12-85 க்கு முன் விண்ணப்பிக்கவும். அகதியாக வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளம்பர இல:- 1702 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1702

## BECON
## STUDY CENTRY

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

DAY CLASS

PUR. APP. } திரு. A. பத்மநாதன்

PHY. — சௌந்தி

CHE. — சண்முகசுந்தரம்

**ஆரம்பம்: 8-2-85**

வெள்ளி 7 a. m.

## தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்

(வரையறுள்ளது)

தெல்லிப்பளை

# பொதுமுகாமையாளர் பதவி

(தற்காலிகம்)

கல்வித்தராதரம்; கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச்சட்டங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

வயது; 30 — 45க்குஇடைப்பட்டோராக இருத்தல் வேண்டும். சங்கப்பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

பிணை; கூ. வே ஆணைக்குழுக் கட்டளைச்சட்டங்களுக்கு அமைவாக சங்கம் விதிக்கும் பிணை செலுத்தவேண்டும்

சம்பளம்: கூ. வே ஆணைக்குழு பிரமாணம் 101/6க்கு அமைவாக நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பம்: சங்கம் வழங்கும் விண்ணப்பப்பத்திரத்தில். விண்ணப்பித்தல் வேண்டும். ரூபா 1/- செலுத்தி விண்ணப்பப்படிவங்கள் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

**விண்ணப்ப முடிவு திகதி: 23-02-1985**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை.

பிற விபரங்கள்: சங்கத்தில், சங்க அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. சிவமகாராசா,
தலைவர்,
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.

01-02-1985,
தெல்லிப்பளை. [1676]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல: 84-அ பிரிவுகள் 524, 532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற சந்தையா நடராசா பெண் மனோன்மணி, பழந்தெரு- கோப்பாய் என்பவரின் மரணசாதனத்தின்/மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் நடராசா வேல்முருகன் ''வேலவாசம்'' பழந்தெரு, கோப்பாய்.
—மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்
இல: 3848

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1984-ம் ஆண்டு மாசி மாதம் 22-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ற தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு. இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்
மனு. சட்டத்தரணி

1985-ம் ஆண்டு தை மாதம் 28ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

1650

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20-11-1925

உதிர்வு: 07-02-1984

முன்னாள் கல்வியதிகாரி

**சு. சிவசுப்பிரமணியம்**

எங்களைப் பேரன்புடன் பேணிக்காத்து வளர்த்த அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆழ்ந்த நன்றியுடன் தினமும் அஞ்சலி செய்கின்றோம்,

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, மக்கள்.

''திருமனை'', அளவெட்டி. (1616)

உ

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 1-12-1921

உதிர்வு: 8-1-1985

**ஆ. கணபதிப்பிள்ளை (ஆலா)**


[முன்னாள் உடுப்பிட்டி கிராமசபை ஊழியர்]

ஆருத்துயரினிலே எமையெல்லாம் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயிலினையே நீ கொண்டாய் ஆலா நாளாந்தம்
உன் நினைவால் நாமெல்லாம் வாடுகின்றோம் மின்னலென நீ மறைந்து நமை நாளும் வருத்துகின்ற
கோரப்பிரிவதனை கூற்றுவன் ஏன் நமக்களித்தான்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்

அன்னாரின் மைத்துனன, மருமக்கள்,
மற்றும காலஞ்சென்ற சட்டத்தரணி
இ. தாமோதரம்பிள்ளை குடும்பத்தினர்.

கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி.
7-1-1985. [1602]

## ஈராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 2-5-1953

உதிர்வு: 6-2-1983

**அமரர் திரு. M. நவஜீவன்**

அன்பின் திருவுருவம் பண்பின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்துவிட்ட அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை துதிக்கிறோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனி.

''ஜீவகம்'',
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. [1714]

### மணிவாக்கு

அன்புடன் நடந்துகொள்ளச் செலவு கிடையாது.

— மகாத்மா காந்தி

## நமது நோக்கு

# பேச்சுவார்த்தையே வழி!

இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக இந்திய பிரதம மந்திரி திரு. ரஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பௌத்த பிக்குகளின் மகா சங்க பிரதிநிதிகள் குழுவொன்று விரைவில் புதுடில்லிக்குப் போகவிருப்பதாக கலாநிதி வல்பொல ராகுல தேரோ அறிவித்திருக்கிறார்.

அரசியல்சார்பற்ற ஸ்தாபனம் என்றுகருதப்பட்டபோதிலும் இந்த நாட்டின்தேசிய பிரச்னைகளில் அரசியல் தீர்மானங்களை நிர்ணயிப்பதில் மகாசங்கம் பெரும் பங்கு வகித்து வருவது பகிரங்க விடயம் கடந்த காலங்களில் சிங்களத் தலைவர்கள் தமிழ்த் தலைவர்களுடன் செய்துகொண்ட பல ஒப்பந்தங்களும், அளித்த வாக்குறுதிகளும் முறையாகச் செயல்பட முடியாமல் போனமைக்கு மகாசங்கத்தினரின் ஆதரவு கிடைக்காமல் போனது முக்கியகாரணமாகும். சர்வகட்சி மகாநாட்டின் தீர்மானங்களை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நிராகரித்ததன் காரணமாகவே அரசு அவைகளைக் கைவிட நேர்ந்ததுஎன என்னதான் கூறப்பட்ட போதிலும் இத் தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதை மூர்த்தண்யமாக எதிர்ப்பதற்கு மகாசங்கங்கமும் வண வல்பொல ராகுல தேரோவும் உறுதியுடன் எடுத்துககொண்ட நடவடிக்கைகளை அரசினால் எதிர்கொள்ள முடியவில்லை என்பதை மறக்கவியலாது. மகாசங்கத்தைப் புறக்கணித்துவிட்டு எதுவித தேசிய தீர்மானங்களையும் நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு இருக்கிறதுஎன்பதேவெளிப்படையான உண்மை.

எனவே இலங்கை - இந்திய தலைவர்களுக்கிடையில் இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக உயர்மட்ட ஆலோசனைகள் நடைபெறுவதற்கு முன்பதாக மகாசங்கத்தின் தூதுக்குழுவொன்று இந்தியத் தலைவர்களைச் சந்திப்பது வரவேற்கத்தக்கது.

மகாசங்கம் இலங்கை இனப் பிரச்னை தொடர்பாக தான் மேற்கொண்டுவரும் நிலைப்பாட்டினை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்குவது ஒருபுறமிருக்க, இவ்விடயத்தில் இந்தியஅரசு மேற்கொண்டுவரும் நிலைப்பாட்டினையும் சங்கம் விரிவாகப் புரிந்துகொள்ளவும் இது வாய்ப்பளிக்கும் என்று கருதலாம். அதன் பின்னர் இந்தியத் தலைவர்களுடன் செய்துகொள்ளப்படும் உடன்பாட்டினை இலங்கை அரசு மகாசங்கத்தின் ஆதரவுடன் செயல்படுத்தக்கூடியதாய் இருக்கும்.

இதற்கிடையில் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா இந்தியாவுக்குச் செல்வதற்கான ராஜீய முன்னேற்பாடுகள் இன்னமும் முடிவுறவில்லை என்று தெரிகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு நாடு திரும்பியுள்ளதேசியபந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தமது பிரயாண பெறுபேறுகள் தொடர்பாக ஜனாதிபதிக்கும், அமைச்சரவைக்கும் எடுத்துக்கூறிய பின்னரே இலங்கை - இந்திய உயர்மட்ட பேச்சுகளுக்கான ராஜீய ஏற்பாடுகள் செய்யப்படலாம் என்று கருதப்படுகின்றது.

கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் அமைச்சர் மாகாண சுயாட்சி பற்றியும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஆயுதம் பெற்றுக்கொள்ளவல்ல அரசியல் தீர்வொன்றை எட்டுவது தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காகவே தாம் அமெரிக்கா சென்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எமது உள்நாட்டு இனப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வதற்கு வெளியாரின் ஆலோசனையோ, வழிகாட்டலோ தேவையில்லையென்று கூறிவந்த அமைச்சர் இப்பொழுது அமெரிக்காவில் ஆலோசனை நடத்திவிட்டு வந்திருப்பது விசித்திரமானாலும் இலங்கை விவகாரத்தில் தொடர்பும், அக்கறையும் கொண்டுள்ள இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு பீடிகையாகவே இக்கூற்று இருக்க வேண்டும் என்று நாம் கருதலாம்.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைக்கு தீர்வு காணலாம் என்ற வாய்ப்பிருக்கும்போது அரசு பிரிட்டனிடமிருந்து ஆயுதங்களையும் கடற்படைக் கப்பல்களையும் கொள்வனவு செய்ய விருப்பதாகக் கூறப்படும் செய்தி கவலையளிப்பதாகும். ஏட்டிக்குப் போட்டியாகக் காரியங்கள் மிகைப்பட்டுவருவது எதிர்காலத்தை இருள்மயமாக்கவே உதவும் என்பதை அரசு கருத்தில் கொள்வது அவசியம்.

## ஞானோதய சபை ஆண்டு விழா

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 38-வது ஆண்டு விழா இன்று முதல் 7-2-85 மூன்று தினங்களுக்கு வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான அரங்கில் முதல் நாள் இந்து இளைஞர்சங்கத் தலைவர் திரு சு ஏழூர் நாயகம் தலைமையிலும் இரண்டாம் நாள் யாழ் ஆங்கிலக் கல்வியதிகாரி திரு இ. குலசேகரன் தலைமையிலும், மூன்றாம் நாள் பண்டிதா இ நமசிவாயம் தலைமையிலும் இவ்விழா இடம்பெறும். மூன்றாம் நாள் விழாவில் 'பெரிய புராண வசனச் சுருக்கம்'' என்னும் நூல் வெளியீடு இடம் பெறும். சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியீட்டுரை நிகழ்த்துவார் மூன்றுநாள் விழாவிலும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

# ஆஸ்பத்திரியை தொடர்ந்து நடத்த லயன்ஸ் முயற்சி

(மாவிட்டபுரம்)

கட்டிடங்கள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதால் இயங்க முடியாத நிலையில் உள்ள வல்லை ''லயன்ஸ்'' ஆஸ்பத்திரியை தொடர்ந்தும் இயங்கச் செய்ய அச்சுவேலி, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் பொருத்தமான இடத்தை தந்துதவுமாறு மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் பொதுமக்களைக் கோரியுள்ளது.

மேற்படி லயன்ஸ் கழகத்தால் 83 ம் ஆண்டு டிசம்பரில் பொறுப்பேற்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் ஜூலைக்கலவர அகதிகள் 13 பேருக்கு வேலை வாய்ப்பும் வழங்கி அவர்களுக்கு ''நொருட்'' ஸ்தாபனத்தின் உதவியுடன் 2 லட்சம் ரூபா செலவில் வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படடிருந்தன. அத்துடன் மேலும் பல வைத்திய நிபுணர்களும், தாதிகளும், ஏனைய தர ஊழியர்களும் நிரந்தரமாகக் கடமையாற்றி வந்தனர்.

இவ் வைத்தயசாலை வளவில் தாதிமார் பயிற்சி நிலையமொன்றையும் விரைவில் நிறுவ திட்டமிடப்பட்டிருந்தது.

இத்தகவல்களைத் தெரிவித்த மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. ஆர். மனோகரன் இந்த ஆஸ்பத்திரியை தொடர்ந்தும் இயங்கவைத்து மக்களுக்கு சேவையாற்ற உதவுமாறு பொதுமக்களைக் கோரியுள்ளார்.

பொருத்தமான இடம் கிடைக்கும் பட்சத்தில் ஆஸ்பத்திரியை தொடர்ந்தும் இயங்கச்செய்ய ''லயன்ஸ்'' கழகம் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமெனவும் அவர் கூறினார்.

# பண்டத்தரிப்பு அன்னையர் முன்னணி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு, சில்லாலை, சாந்தைஆகிய பகுதிகளுக்கான அன்னையர்முன்னணியின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் அண்மையில் பண்டத்தரிப்பில் நடைபெற்றது.

இதன் தலைவியாக திருமதி பேளி அத்தனசியார் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவியாக திருமதி ரேஸ்லின் சாமிநாதரும், செயலாளராக திருமதி மனு வலா சிங்கராயரும், தனாதிகாரியாகத் திருமதி லெற்றீசியா யேசுதாசனும் தெரிவுசெய்யப்பட்டனர். திருமதி பேளி அத்தனசியார் அங்கு உரையாற்றுகையில்:- ''அண்மைக்காலத்தில் இப்பகுதியில் பரவலாக இளைஞர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், இது தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். மாவட்ட இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்தின ஆகியோரை யாழ். அன்னையர்முன்னணி, யாழ். பிரஜைகள் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் சென்று பேச்சுவார்த்தை நடாத்தியது'' என்று கூறினார்.

செயலாளர் திருமதி மனுவலா சிங்கராயர் உரையாற்றுகையில்:- ''முன்னணி மேற்கொள்ளவிருக்கும் செயற் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறி, ஏனைய அன்னையர் முன்னணிகளுடன் இந்த அன்னையர்முன்னணியும் இணைந்து செயலாற்றும்'' என்றார்.

# வல்லைப்பாலத் தகர்ப்பினால் பொதுமக்கள் சிரமம்

[கோப்பாய்]

வல்லைப்பாலத்தில் இரண்டு பக்கங்களிலும் வீதி வெடிவெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதினால் வடமராட்சிப் பகுதி மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர்.

வல்லைப்பாலக் குண்டுவெடிப்பினால் பாலத்திற்கு வடபகுதியில் 60 அடி நீளமான வீதி 6 அடி ஆழமாகத் தகர்க்கப்பட்டது. இது தைப்பொங்கல் நாள் அன்று அதிகாலை தகர்க்கப்பட்டு, மறுநாள் இளைஞர்களினாலும் பொதுமக்களாலும் திருததிஅமைக்கப்பட்டது

பாலத்திற்குத் தெற்குப் பகுதிமதகு, வீதியுட்பட 75 அடி நீளமான பகுதி 7 அடி ஆழமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இவ்வீதியால் பாரமான பொருட்கள் கொண்டு துவிச்சக்கரவண்டியில் பிரயாணம் செய்கின்ற பலரின் உதவியுடன் தள்ளிமேலே வீதிக்கு வந்துபிரயாணத்தைத்தொடர வேண்டியுள்ளது.

குறிப்பிட்ட பாதையில் பஸ் பிரயாணம் நடைபெறாத போதிலும், மினிபஸ்கள் இரண்டு பக்கத்திலும் பிரயாணிகளைக் கொண்டுவந்து

(5-ம் பக்கம் 1-ம் கலம் பார்க்க]

# வினாத்தாள் வரவில்லை; பரீட்சை ஸ்தம்பிதம்

(மாவிட்டபுரம்)

பயிற்சி நெறியை முடித்துக் கொண்ட சுகாதார குடும்ப நல சேவையாளர்களுக்கு பரீட்சையை நடத்த கொழும்பிலிருந்து வினாத்தாள்கள் வராததால் பரீட்சை ஸ்தம்பித்து அவர்கள் பெரும் மனச்சோர்வும், கவலையும் அடையநேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி இ தெய்வேந்திரனின் தலைமையில் சுகாதார குடும்ப நல சேவையாளர்களுக்கான 6 மாத பயிற்சி நெறி காங்கேசன்துறையிலுள்ள பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வந்தது நாட்டில் தமிழ் மூலமான பயிற்சி நெறி இங்கு மட்டுமே நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் பகுதிகளிலிருந்து பயிற்சிபெற வந்த குடும்ப நல சேவையாளர்களுக்கு பரீட்சையை நடத்தி சான்றிதழ் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதிலும் இம்முறை வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து வராததால் பரீட்சை ஸ்தம்பிதமடைய நேரிட்டுள்ளது.

இதுபற்றி காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்ட போதும் இன்னமும் பதில் எதுவும் கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் ஏனைய மொழிகளில் பயிற்சி பெற்றவர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பயிற்சியை முடித்தும் பரீட்சை நடத்தப்படாமையால் காங்கேசன்துறையில் பயிற்சியை மேற்கொண்டிருந்த குடும்பநல சேவையாளர்கள் பெரிதும் சோர்வும் கவலையும் அடைந்துந்துள்ளனர்.

# 19 ஊழியர்கள் வேலை இழப்பு!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் ''ஹாபர்வியூ ஹோட்டலில் பணிபுரிந்த 19 ஊழியர்கள் வேலையிழந்து பல மாதங்களாவதால் அவர்கள் பெரிதும் கஷ்டப்படுவதாக கவலை தெரிவிககப்படுகிறது.

மேற்படிஹோட்டல் கடந்த சில மாதங்களாக ராணுவ உபயோகத்துக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதனால் அங்கு கடமையாற்றும் 19 ஊழியர்கள் வேலை இழக்க நேரிட்டது. இவர்களில் ஒரு சிலருக்கு லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் சிமெந்து ஆலையில் தற்காலிகமாக வேலை வழங்கப்பட்டுள்ள போதிலும் முன்னர் போன்று தமக்குள்ள சலுகைகள், கிடைப்பதில்லை என்று குறைபட்டுக் கொள்கிறார்கள்.

வேலையில்லாது கஷ்டப்படும் தமக்கு உதவுமாறு இந்த ஊழியர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியுள்ளனர்

# குருநகரில் ஹட்டன் நாஷனல் வங்கி

(யாழ்ப்பாணம்)

ஹட்டன் நாஷனல் வங்கிக் கிளையொன்று குருநகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இக்கிளையில் இம்மாதம் 11ந்தேதி முதல், பணம் கொடுக்கல் வாங்கல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வவுனியாவில் 6 கடைகளில் கொள்ளை

(வவனியா)

வவனியா நகரில் கடந்த திங்கள் இரவு இனம்தெரியாதவர்களினால் 6 கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வவனியா நகரில் பிரபல்யம் பெற்ற சப்பாத்துக்கடை ஒன்றும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. (கு)

## இந்திய உளவு மோசடி:

# பம்பாய் பிரபல நிறுவன நிர்வாக இயக்குநர் கைது!

புதுடில்லி, பெப். 6

இந்தியாவின் பாதுகாப்பு இரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்று உளவு மோசடி செய்துவந்த பம்பாயைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான குமார் நாராயண் பணிபுரிந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மனோக்கிலால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

மனோக்கிலாலின் நிறுவனம் ஒரு பல்தேசிய கம்பனி. உலகிலுள்ள பல பல்தேசியக் கம்பனிகளுடன் இந்தக் கம்பனிக்கு நெருங்கிய தொழில் உறவுகள் இருப்பதும் தற்போது தெரிய வந்துள்ளது

இந்தக் கம்பனியின் ஏனைய உயர் அதிகாரிகளையும் இரகசியப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

அதேவேளை குமார்நாராயண் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தைத் தொடர்ந்து அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று வெளியுறவு அமைச்சக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தியப்பிரதமரின் பிரதான செயலாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த சுவாமிநாத்ராம் என்பவரும் தற்போது ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

இவர் அளித்தஒப்புதல் வாக்குமூலத்தில் ''இதே அலுவலகத்தில்பணிபுரியும் வி. கோபாலன் என்பவர் தம்மை குமார் நாராயணுக்கு அறிமுகப்படுத்தியதாகவும் அதனைத்தொடர்ந்து தமது அலுவலகத்தில் கிடைக்கும்முக்கிய அரசாங்க இரகசியங்களைதாம் குமார் நாராயணுக்குகொடுத்துவந்ததாகவும் ஒவ்வொரு முறையும் இதனைக் கொடுக்கும்போது 100 ரூபா முதல் .00 ரூபா வரை கிடைத்தென்றும், இதனைக்கொடுப்பதினால் நாட்டின் தேசிய நலனுக்கு ஆபத்து வரும் என்று தமக்குத் தெரியாது'' என்றும் சுவாமிநாத்ராம் தெரிவித்துள்ளார்.

சுவாமிநாத்ராம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தைத் தொடர்ந்து இதுவரை 4 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதேவேளை மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தில் தளபாட உற்பத்தித்துறையில் செயலாளர் எம். ரி. சரீம் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளார்.

இவரது அலுவலகத்தைச் சேர்ந்த பல அதிகாரிகள் இந்திய நாணயம் சம்பந்தமான இரகசியங்களை வெளிநாடுகளுக்கு கொடுத்தது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே இவர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டார் என்று கூறப்பட்டது. [சூ]

## ரூபவாஹினி

மாலை
5-00 செய்திகள்
5-05 உடல் நலம் பற்றிய நிகழ்ச்சி
5-30 சிங்களத் தொடர் நிகழ்ச்சி
6-00 ஆங்கிலத் தொடர் நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
6-50 ஆங்கிலத் நிகழ்ச்சி தொடர்ச்சி
7-25 சிங்கள தொலைக் காட்சி நாடகம்
8-00 செய்திகள் [சிங்களம்]
8-25 சிங்கள தொலைக் காட்சி நாடகம்
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 சிங்களப் பேட்டி நிகழ்ச்சி
9-50 உலக கிரிக்கெட் தொடர் நிகழ்ச்சி
10-50 ஒளிபரப்பு முடிவு.

## யாருடையது

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த திரு. அருளம்பலம் வைத்தியநாதன், தெகிவளை ஸ்ரீவிமலசாரரோட், திரு. அருளம்பலம் தியாகராசா, கொடிகாமம் திரு. முத்தையா கார்த்திகேசன், ஆனைக்கோட்டை திரு. பொன்னையா மாணிக்கவாசகர், திருநெல்வேலி கிராம விஸ்தரிப்புத் திட்டம் திரு. சின்னையா ஜீவானந்தம், கொழும்பு புளுமண்டால் வீதி திரு. வரப்பிரகாசம் தவஞானராஜா, முரசுமோட்டை ஊரியான் திரு. சுப்பிரமணியம் ஜெகதீஸ்வரன், நாவற்குழி தங்கரத்தினம் தியாகராஜா, புன்னாலைக்கட்டுவன் வடக்கு திரு. வேலுப்பிள்ளை தியாகராசா ஆகியோரின் அடையாள அட்டைகள் ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## 6,000 பேர் நியமனப்பத்திரம் தாக்கல்

புதுடில்லி, பெப். 6

இந்தியாவில் 11 மாநிலங்களிலும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் நடைபெறவுள்ள சட்டசபைத் தொகுதிகளில் போட்டியிடுவதற்கு 6,000 க்கும் அதிக மானவர்கள் இதுவரை நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

## சென்னை தொலைக்காட்சியில்

# எம். ஜி. ஆரின் வரவேற்பை யாழ்நகர் மக்கள் பார்த்தனர்!

[யாழ்ப்பாணம்]

தமிழ்நாட்டில்முதலமைச்சர் திரு.எம்.ஜி.ராமச்சந்திரனுக்கு அளித்த வரவேற்பை சென்னை தொலைக்காட்சி மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள மக்களும் பார்த்தார்கள்.

கடந்த திங்கட்கிழமை முதல் சென்னைதொலைக்காட்சி யாழ்ப்பாணத்தில் தெளிவாகத்தெரிய ஆரம்பித்துள்ளது. சென்னை தொலைக்காட்சிஒளிமட்டுமன்றி ஒலியும் தெளிவாகக் கேட்கிறது.

எம். ஜி. ஆருக்கு அளிக்கப்பட்டவரவேற்பு யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் மட்டும் தெளிவாகக் காணப்படவில்லை என்றும், வேறு ஒருஅலைவரிசை குறுக்கிட்டதால் இந்நிலை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் சென்னை தொலைக்காட்சி ஆரம்பம்முதல் இறுதிவரை தெளிவாக இருந்தது. [க]

## பிரிட்டிஷ் பிரஜைகள் விடுதலை

ரிப்போலி, பெப். 6

லிபியாவில் கடந்த எட்டு மாதகாலமாகக் காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பிரிட்டிஷ் பிரஜைகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதனை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தட்சர் வரவேற்றுள்ளார்.

## ஜிப்ரோல்டர் எதிர்காலப் பேச்சுக்கள்

ஜெனிவா, பெப் 6

ஜிப்ரோல்டரின் எதிர்காலம் குறித்து பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சரும் ஸ்பெயின் வெயிநாட்டமைச்சரும் ஜெனிவாவில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

## மாணவிகள் முன் மாதிரி

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவிகள், அகதிகளுக்கு வழங்கவென உடுபிடவைகளைச் சேகரித்து வருகின்றனர்.

வலி. வடக்குப் பகுதியில் வீடு வீடாகச் சென்று இந்த உடுபிடவைகள் சேகரிக்கப்படுகின்றன.

தமிழ்ப்பகுதிகளில் அகதிகளாகி கஷ்டநிலையில் இருப்பவர்களுக்கு உதவவே இவ்வாறு உடுபிடவைகள் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## "தச்சுத் தொழிலாளியான கடத்திச் செல்லப்பட்ட மகனை விடுதலைசெய்யுங்கள்"

### பெற்றோர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்ட மதிராஜ் என்ற தச்சுத் தொழிலாளியை விடுதலை செய்யுமாறு அவரது பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல்விவகாரங்களிலோ, அன்றி, சமூக விரோதச்செயல்களிலோ தமது மகன் ஈடுபடக்கூடிய நிலையில் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவரது குடும்பத்தினர் கண்ணீருடன் பட்டினியாகவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

பன்னிரண்டு பிள்ளைகளுள் இவர் தலைப்பிள்ளையென்றும், வறுமைநிலையிலிருக்கும் இக்குடும்பத்தின் அன்றாடச்சீவியம் இவரின் உழைப்பிலேயே தங்கியிருந்ததாகவும், இவரின் பெற்றோர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்,

## மாலைதீவு ஜனாதிபதி இந்தியப்பிரதமர் சந்திப்பு

புதுடில்லி, பெப். 6

மாலைதீவு ஜனாதிபதி அப்துல்கையூம் இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தியைச் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஜனாதிபதி கையூம் இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங்கையும் சந்தித்து, பல்வேறு விடயங்கள்குறித்து கலந்துரையாடினர் ஜனாதிபதி கையூம் நேற்றுமாலை சென்னை பயணமானர்.

## ஊரிக்காடு சம்பவம்:

# இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஊரிக்காட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வே. மகேந்திரன் (34 வயது) என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சைக்கிளில் நண்பனுடன் சென்று கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும் வயிற்றில் காயம் ஏற்பட்டதும், அவர்வீழ்ந்துவிட்டதாகவும், பின்னர் மீண்டும் சுடப்பட்டுக் கையில் சூடுபட்டதாகவும் கூறப்படுகிறது

நண்பன் அவரை மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று அனுமதித்தார். பின் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வரப்பட்டார்.

நேற்று 'எக்ஸ்-ரே' எடுக்கப்பட்டது. (க)

## சட்டப்பேரவை, லோகசபை

# அ. தி. மு. க உறுப்பினர்களை எம். ஜி. ஆர் சந்தித்தார்

[சென்னை]

தமிழ்நாட்டிலிருந்து சட்டப்பேரவைக்கும், லோகசபைக்கும் தெரிவுசெய்யப்பட்ட அ. தி. மு. க உறுப்பினர்களை தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றுச் சந்தித்துக்கலந்துரையாடினர்.

தமிழ்நாட்டில் புதியஅமைச்சரவை அமைப்பது தொடர்பாக திரு. ராமச்சந்திரன் தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ். எல். குரானவை இன்று சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. திரு. ராமச்சந்திரன் நல்ல திடகாத்திரமாகவும், மன உறுதியுடனும் இருப்பதாகத் தினமும் அவரைப் பரிசோதித்துவரும் டாக்டர் சிறிபாதராவ் தெரிவித்துள்ளார்.

## கொள்ளை

(வவனியா)

ஓமந்தை மகாவித்தியாலயத்தின் ஆய்வு கூடம் இனம் தெரியாதவர்களினால் உடைக்கப்பட்டு பெறுமதியான இரசாயனப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக வவனியா பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (சூ)

## இடமாற்றம் பெற்றுள்ள

# யாழ். பொலிஸார் லீவிற்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்றுள்ள 21 பொலிசாரும் நேற்றுமுன்தினம் கொழும்புக்குச் செல்லவில்லை. இவர்களுக்கு இம்மாதம் 5-ம் திகதி திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

21 பேரும் லீவிற்கு விண்ணப்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. தற்போது இங்கு குடும்பத்துடன் வசித்துவரும் இவர்கள் வருடமத்தியில் இடமாற்றம் பெற்றுச் செல்வதால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுமென்றும் கொழும்பில் இவர்களது குடும்பம் தங்கியிருக்க உடனடியாக வசதிகள் செய்யமுடியாமல் இருப்பதாகவும் அத்துடன் போக்குவரத்துக் கஷ்டங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. (கி)

## அபிவிருத்திச் சங்க புதிய நிர்வாகிகள்

(மாவிட்டபுரம்)

குரும்பசிட்டி பொன். பரமானந்தா மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. சி. கனகசுந்தரம் [அதிபர்] உப தலைவர் திருமதி. ம. சின்னத்துரை [உப அதிபர்] செயலாளர் திரு. ஞா. சிறீமனோகரன், பொருளாளர் திருமதி. செ. தில்லைநடராசா (ஆசிரியை) 7 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது

## வல்லைப்பாலத் . . .

(3ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

பாலத்தை நடந்து கடக்கச்செய்து இணைப்பு மினிபஸ் சேவையை நடத்துகின்றனர்.

வல்லைவெளியில் பிரயாணிகள் குறிப்பிடத்தக்க அளவில் கூடிநிற்பதும், அடுத்த பஸ் வரும்வரை எதிர்பார்த்துக் காத்திருப்பதும் பல்வேறுவிதமான அச்சத்தை ஏற்படுத்துகிறது எனப் பிரயாணிகள் கவலைகொள்கின்றனர்.

வடமராட்சிப் பகுதிக்கும் யாழ்ப்பாணப் பகுதிக்கும் செல்லும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் தினமும் சிரமப்படுகிறார்கள்.

ரீகல் மினி
தினசரி 10-15, 1-15
The Iron Monkey
ஜேர்மன் மொழியிலான விறுவிறுப்பான கராட்டி சண்டைப்படம்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி-கே.ஆர். விஜயா
ரஜனி
ஜஸ்ரிஸ் கோபிநாத்

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

## வவனியா மட்டக்களப்பு பஸ் சேவை

[வவனியா]

வவனியா-மட்டக்களப்புபஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 8 மணிக்கு இப்பஸ் இங்கிருந்து புறப்படுகின்றது.

வவனியா இ. போ. ச. சாலையே இச் சேவையினை நடத்துகின்றது.

பிரயாணிகளின் நலன்கருதி குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சபை அதிகாரி ஒருவர் கூறினார்.

## அரிசி தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியில் அரிசிக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அத்துடன் அரிசி விலையும் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது.

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத்திலும் அரிசி கையிருப்பில் இல்லை என்றும், அரிசி வழங்குமாறு மேலிடத்திற்கு கோரிக்கை விடப்பட்டிருப்பதாகவும் சங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நியமனம்

(வண்ணார்பண்ணை)

கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்கள பிராந்திய சேவைக்கால விவசாயப் பயிற்சி நிலையத்தில் பயிற்றுநராகப் பணியாற்றிய விவசாயப் போதனாசிரியர் திரு ப. தருமலிங்கம் திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையப் பண்ணை முகாமையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

## இறந்து கிடந்தார்

(கிளிநொச்சி)

இரணைமடு சந்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஒருவர் கொலை செய்யப்பட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இரத்தினராசா தருமராசா [32 வயது] என்பவரே கொலை செய்யப்பட்டு இறந்து கிடந்தார் ஒரு பிள்ளையின் தந்தையாகிய இவர் வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்ததாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக மரண விசாரணை நடத்திய கிளிநொச்சி நீதவான் திரு. பாலச்சந்திரன் கொலை எனத் தீர்ப்பளித்தார். (சூ)

## அறிவித்தல்

கட்டுடை, மானிப்பாய், கேவங்காமம் ஆலடி ஞானவைரவர் கோவில், எமது குடும்பத்தவரின், பிரத்தியேக, சொத்துரிமையுள்ள வழிபாட்டுத்தலம் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறோம். பிறர் வழிபாடு தடைசெய்யப்படமாட்டாது நிர்வாகம் சொத்துரிமை பரம்பரைக்குரியது.

த. செல்லையா

1710

## மாங்குளத்தில் மின் அலுவலகம்

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவு, வவனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கான இலங்கை மின்சார சபையின் மின்பொறியியலாளர் அலுவலகம் மாங்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நிரந்தரக்கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

இது வரைகாலமும் இவ் அலுவலகம் தற்காலிகமாகப் பரந்தனில் இயங்கி வந்தது.

## ரூ. 20,000 அன்பளிப்பு

(வவனியா)

தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் வவனியாவிலுள்ள அகதிகளுக்கு உதவும் முகமாக வவனியா பிரஜைகள் குழுவிற்கு 20 ஆயிரம் ரூபாவை அனுப்பியுள்ளது

ஓமந்தை அகதி முகாமிலுள்ள மக்களுக்குச் சில உதவிகளை வழங்க வவனியாவிலுள்ள பிரஜைகள் குழு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

உணவுப் பொருட்களையும், பொட்டலங்களாக அகதிமுகாமிலுள்ள மக்களுக்கு வழங்கவுள்ளதாகப் பிரஜைகள்குழுத் தலைவர் திரு. எக்ஸ். சொர்ணபாலா கூறினார்.

## சிறுவன் பலி

(வவனியா)

புளியங்குளத்தில் 12 வயது சிறுவன் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்.

இதே தினம் புளியங்குளத்தில் ஒருபெண் உட்பட 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவனியா பிரஜைகள் குழு கமிட்டிக்கு புகார்செய்யப்பட்டுள்ளது,

# இப்படியும் நடக்கிறது

இந்தோனேஷியாவில் பாலி நகரில், 56 வயதுள்ள திரு. கெட்டுவெட்டான் என்று ஒரு நபர் இருக்கிறார்.

இவரைப்பற்றி, அதாவது இவரது உடல் ஆரோக்கியம் குறித்து அறிந்துகொண்ட ஆராய்ச்சியாளர்கள், தலையைச் 'சொறிந்து' கொண்டிருக்கிறார்கள்! காரணம்:

பதினெட்டுக் குழந்தைகளுக்குத் தந்தையான இவர், முப்பத்து ஒன்பது ஆண்டுகளாக தூங்காமல் (கயிற்றில் அல்ல, இமைகளை மூடாமல்) இருந்து வருகிறார்!

இவரது பொழுது போக்கு: சஞ்சிகைகள் படிப்பது, வானொலி கேட்பது, பியானோ வாசிப்பது.

தூங்காமல் இவரால் எப்படி இருக்கமுடிகிறது என்பது பற்றி உடல்நல ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள். திரு. கெட்டுவெட்டான் இப்போது ஆராய்ச்சிக்குரிய மனிதராக இருக்கிறார்.

★ ★ ★

முல்லைத்தீவு அகதிகளுக்கு பால்மா போன்ற உணவு வகைகளை வழங்குவதில் 'தில்லுமுல்லு' நடைபெறுவதாக நேற்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

இச் செய்தியைப் படித்த முல்லைத்தீவு கச்சேரி உயர் அதிகாரிகள் தொலைபேசியில் நேற்றுப் பகல் தொடர்புகொண்டு முற்றும் முழுதாக மறுத்து; ''பால்மா எக்கச்சக்கமாக கையிருப்பில் இருக்கிறது. அகதிகளுக்கு தொடர்ந்து வழங்கிவருகின்றோம். யாழ். வர்த்தகர்கள் பால்மா டின்வகைகளைத் தாராளமாக உதவியுள்ளனர். அரிசி மற்றும் காய்கறிக்குத்தான் தட்டுபபாடு நிலவுகிறது. மைசூர் பருப்பு, கிழங்கு போன்றவற்றை வாரி வழங்கினால் பெரும் உதவியாக இருக்கும்...') என்று கோரிக்கை விடுத்தனர்

★ குறிப்பு; மேற்படி முதல் செய்தி தொடர்பாக குறிப்பிட்ட தர்ம ஸ்தாபனங்களுடன் தொடர்புகொண்டுள்ளோம்.

— ஊடுருவி

# சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் பெரும் கொள்ளை!

(ஊரெழு)

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க மொத்தவிற்பனை நிலையத்தின் களஞ்சிய அறையிலிருந்து செவ்வாய்க் கிழமை இரவு பல ஆயிரக்கணக்கான பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டிருப்பதுடன் அதேதினம்மாலை சங்கத்திற்குச் சொந்தமான லொறியொன்றும் கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவம் இரவு 11-30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

மேற்படி கூட்டுறவுச் சங்கத்திற்கு லொறியொன்றில் வந்த சுமார் 15க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அடங்கிய கோஷ்டியொன்று, அங்கு கடமையிலிருந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி வெளிக்கதவு உட்கதவு உட்பட களஞ்சிய அறைகளின் கதவுகளையும் உடைத்து உள்ளே நுழைந்து பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள இரண்டு களஞ்சிய அறைகளிலும் வைக்கப்பட்டிருந்த அரிசி, சீனி, மா, மைசூர் பருப்பு, கருவாடு, பால்மா வகைகள், சைக்கிள்களுக்கும் லொறிகளுக்கும் பயன்படுத்தும் டயர்கள், ரின்மீன்கள் உட்பட பலபொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது

அரிசி, சீனி, மா, மைசூர் பருப்பு வகைகள் ஒவ்வொன்றிலும் பத்துக்கு மேற்பட்ட மூடைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது.

செவ்வாய்க் கிழமை மாலை 4-30 மணியளவில் மேற்படி கூட்டுறவுச்சங்கத்திற்கு வந்த மூன்று இளைஞர்கள் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி சங்கத்தின் பின்பக்கமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த புதிய லொறியொன்றை எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த வாரம் கடத்திச்செல்லப்பட்ட மேற்படி கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 'பவுஸர்' வாகனமும் இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வட்டக்கச்சி விவசாய பண்ணையில் கொள்ளை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சியிலுள்ள அரசாங்க விவசாயப் பண்ணையில் இனம்தெரியாத ஆயுதம்தாங்கிய இளைஞர்களினால நேற்று முன்தினம் இரவு விவசாய உபகரணங்கள், பணம் உட்பட 20,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

துப்பாக்கிகள் சகிதம் வந்த இளைஞர்கள் அங்கிருந்தவர்களை பயமுறுத்தி மேற்படி கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது.

இந்த பண்ணையில் இதற்கு முன்னர் 4 தடவைகள் 'டிராக்டர்' உட்பட பெறுமதியான உபகரணங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதனால் தற்போது இப்பண்ணையைமூடப்படும் அபாயம் உள்ளதாம்.

இப்பண்ணை மூடப்படும்பட்சத்தில் 100க்கும் மேற்பட்டோர் வேலை இழக்கும் நிலை ஏற்படவுள்ளது (சூ)

## சுவரொட்டிகளில் கோரிக்கை

(ஊரெழு)

''சகல இயக்கங்களினதும் போராளிகளுக்கு'' என்று குறிப்பிடப்பட்டுள்ள சில சுவரொட்டிகள் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஒட்டப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இங்கு அண்மைக் காலமாக நடைபெற்றுவரும் மின்பல்ப் திருட்டுகளைச் செய்பவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கைகளை எடுக்கும்படி வேண்டுகோள் விடுப்பதாக மேற்படி சுவரொட்டிகள் அமைந்திருக்கின்றன.

இங்குள்ள வீடுகளிலும் விற்பனைநிலையங்களிலும் வெளியே பொருத்தப்பட்டிருக்கும் மின்பல்புகள் அடிக்கடி திருடப்பட்டு வருவதாகவும், புன்னாலைக்கட்டுவன் சந்தியில் பொருத்தப்பட்டிருந்த மேர்க்குரிபல்ப் ஒன்றும் திருடப்பட்டுள்ளதாகவும் இந்த பல்ப் இங்குள்ள பொதுமக்களால் பணம் சேர்த்து வாங்கியதாகவும் சொல்லப்படுகிறது.

## சென்னையில் 'வெங்கட்'

[சென்னை]

இந்திய உப ஜனாதிபதி திரு. ஆர் வெங்கட்ராமன் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று சென்னை வந்து சேர்ந்தார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்த உபஜனாதிபதியை தமிழக ஆளுனர் திரு. எஸ். எல். குரானா, நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், மாநில முப்படை அதிகாரிகள் வரவேற்றனர்.

# மக்கள் வங்கிக் கிளைகள் மீண்டும் திறக்கப்படும்?

(கரவெட்டி)

வடக்கில் தற்போது மூடப்பட்டிருக்கும் மக்கள் வங்கிக் கிளைகள் விரைவில் மீண்டும் திறக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

நெல்லியடி, சங்கானை, புங்குடுதீவு ஆகியவையே இவையாகும்

இக்கிளைகளை மீண்டும் திறப்பதற்கான உத்தரவு கிடைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தற்போது இவ்வங்கிக் கட்டடங்கள் துப்பரவு செய்யப்பட்டுத் திறப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை மீண்டும் திறக்கப்படும்போதிலும், தற்போது இயங்கும் ஏனைய வங்கிகளைப் போன்ற வங்கி நடவடிக்கைகளே அங்கு நடைபெறும் எனவும் அறியப்படுகிறது.

## ஜீப் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து சுகாதாரத் திணைக்களத்துக்குச் சொந்தமான ஜீப் ஒன்று இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச்செல்லப்பட்டுள்ளது.

## மேற்கிந்தியாவை ஆஸி. வென்றது!

(சிட்னி)

ஆஸ்திரேலியாவுக்கும் மேற்கிந்தியாவுக்குமிடையே நேற்று நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய குழு வெற்றிபெற்றது

உலக கிண்ணத்துக்கான போட்டியின் இறுதி ஆட்டத்தில் முதற்சுற்று போட்டியே நேற்று நடைபெற்றது.

ஆஸ்திரேலியா 50ஓவர்களில் ஆறுவிக்கட் நஷ்டத்துக்கு 247 ஓட்டங்களை எடுத்தது. அலன் போடர் ஆட்டமிழக்காது 127 ஓட்டங்களை பெற்றார் மேற்கிந்தியகுழு சகல விக்கட்டுகளையும் இழந்து 321 ஓட்டங்களை பெற்றது.

# செட்டிகுளத்தில் இரு இளைஞர் பலி!

(வவனியா)

வவனியா செட்டிகுளத்தில் நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

சுப்பிரமணியம் (24-வயது), சிவலிங்கம் (26-வயது) ஆகிய இருவருமே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கருப்பையா இரத்தினம் (13-வயது) என்பவரைக் காணவில்லை.

செட்டிகுளம் பகுதியில் தொடர்ச்சியானவெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் மக்கள் பெரும் பீதியுடன்காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (சூ)

# பிரிட்டனிலிருந்து 6நாய்களை இலங்கை வாங்குகிறது!

## லண்டன் பத்திரிகை தகவல்

(லண்டன்)

பயங்கரவாத சம்பவங்கள் குறித்து துப்புத் துலக்குவதற்காக பயிற்சி அளிக்கப்பட்ட ஆறு நாய்களை பிரிட்டனிடமிருந்து இலங்கை வாங்கவிருப்பதாக 'லங்கா கார்டியன் என்னும் பிரிட்டிஷ் பத்திரிகைச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது:

35 ஆயிரம் ஸ்டர்லிங் பவுணுக்கு (இலங்கை ரூபா சுமார் 12 லட்சம்) விற்கப்படவுள்ள இந்த 6 நாய்கள் தொடர்பாக பயிற்சி அளிப்பதற்காக அதிகாரிகள் சிலரும் இலங்கைக்கு செல்லவிருப்பதாகவும் அந்த செய்தி தெரிவித்தது.

# தென்னிலங்கை செல்லமுடியாத ஆசிரியர்கள் பிரச்னை

(கல்வியங்காடு)

தென்னிலங்கையில் கடமை புரியும்ஆசிரியர்களுக்கு போக்குவரத்து செய்வதில்உள்ள கஷ்டங்கள் குறித்து; அவ்வப் பகுதி கல்விப் பணிப்பாளர்களுக்கு சிபார்சு கடிதங்களை அனுப்பிவைக்க யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் ஏற்பாடு செய்துள்ளார்.

போக்குவரத்து வசதியீனங்கள் காரணமாக தத்தம் பாடசாலைகளுக்கு செல்லமுடியாது பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது பிரச்னைகள்சம்பந்தமாக நேற்று யாழ் அரச அதிபரை சந்தித்தனர்.

இவ்வாசிரியர்களின் முறைப்பாடுகளை கேட்டுத் தெரிந்து கொண்ட யாழ் அரச அதிபர்; மன்னார், வவனியா போன்ற பகுதிகளுக்கு போக்குவரத்து வசதிகள் இருப்பதின் நிமித்தம் அப்பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கட்டாயம் கடமைக்குச் செல்ல வேண்டுமென்று பணித்துள்ளார். [ரா]

# பாண்டிச்சேரியிலும் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு

[புதுச்சேரி]

அடுத்த மாதம் 5ம் திகதி நடைபெறவிருக்கும் பாண்டிச்சேரி சட்டமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் அ. தி. மு. க. வுக்கும் இடையில் தேர்தல் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன்படி 30 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் 20 இடங்களில் இந்திரா காங்கிரசும், 10 இடங்களில் அ. தி. மு க.வும் போட்டியிடும்.

இத்தகவலை அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு பா. உ சண்முகம் நேற்றுத் தெரிவித்தார்.

இந்த இரு கட்சிகளும் போட்டியிடும் தொகுதிகளுக் அறிவிக்கப்பட்டுள்ளன. [சூ]

## பிரதமர் பயணமானார்!

(கொழும்பு)

பிரதமர் திரு ஆர் பிரேமதாசா நேற்று மாலை பாங்ஹொக் பயணமானார். அவருடன் திருமதி ஹேமா பிரேமதாசாவும் சென்றார்.

பிரதமரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன நேற்றுக்காலை அலரிமாளிகைக்குச் சென்றிருந்தார்.

## சைக்கிள் விபத்தில் பலி!

(வவனியா)

வவனியா - கண்டி வீதி நவகம என்ற இடத்தில் இடம்பெற்ற லொறி-சைக்கிள் விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார் முருகேசு என்ற 35 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பலியானவராவர்.

## அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

நீதிபரிபாலன ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அலவனஸ் தொகையை அதிகரிக்க அமைச்சரவை நேற்று முடிவுசெய்தது

நீதிபதிகளுக்கு மேலங்கிக்கென வழங்கப்படும் தொகையை அதிகரிப்பதெனவும் வாடகைப் பணத்தை குறைப்பதெனவும் அமைச்சரவை முடிவுசெய்தது

இலங்கைக்கும் மலேசியாவுக்குமிடையே கப்பல் போக்குவரத்து உடன் படிக்கைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

அண்மையில் சீல் வைக்கப்பட்ட பிரபல பத்திரிகை நிறுவனமான 'ரைம்ஸ்' ஸ்தாபனத்தின் ஊழியர்களுக்கு வேலை வழங்குவது தொடர்பான திட்டம் ஒன்றை தயாரிக்க உபகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

## யாழ். தேவி---

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

வரை சேவையிலீடுபட்டு வந்த 'யாழ் தேவி நாளை முதல் வவனியாவரை சேவையிலீடுபடவுள்ளது.

நாளைக் காலை 7-05க்கு கொழும்புகோட்டையிலிருந்து புறப்படும் யாழ்தேவி 12மணியளவில் வவனியா வந்து 3-15க்கு வவனியாவிலிருந்து கொழும்பு செல்லும்

இந்தச் சேவை தினமும் நடத்தப்படும் என்று ரயில்வேப் பகுதி தெரிவித்தது.

## தொண்டா---

[1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

கேள்விக்கு பதிலளிக்கையிலேயே திரு. அல்விஸ் மேற்கண்டவாறு கூறினர்.

திரு தொண்டமான் மலையக மக்களின் தலைவர் என்பதால் அவர்களின் பிரச்னையை எடுத்துக்கூறவேண்டியது அவரது கடமை என்று கூறிய அமைச்சர் அல்விஸ் அவர் ஐ தே. க. மந்திரி அல்ல ஆதரவாளர் தான் என்றார்.

பத்திரிகைத் தணிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர். ''தணிக்கை பற்றி பலரும் பல விதமாக வர்ணிக்கிறார்கள் நாம் போர் நிலையில் இருக்கிறோம். ஆனாலும் மிகவும் மிருதுவான தணிக்கையே அமுலிலுள்ளது'' என்றார். [இ]

## நேற்றைய---

[1-ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

வயது] இருவரும் படுகாயமடைந்தனர், மற்றும் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குருநகர்பகுதியில் தொடர்ச்சியாக ஏற்பட்ட வெடிச் சத்தத்தைதொடர்ந்து யாழ். நகரில் பதட்டநிலை ஏற்பட்டது

பதட்டநிலை காரணமாக யாழ் பஸ்நிலையத்தில் பிரயாணிகள் நலாபக்கங்களும் சிதறி ஓடினார்கள் பஸ்கள் மினிபஸ்கள் திடீரெனப் புறப்பட்டு சென்றன வர்த்தக நிலையங்கள் அவசரமாக மூடப்பட்டன. மக்கள் வீதிவழியாக ஓடிக்கொண்டிருந்தனர்.

மினிவான்கள், யாழ் ஆஸ்பத்திரி. வெளிநோயாளர் பகுதிக்குள் சென்றதைத் தொடர்ந்து பயத்தினல் அதிலிருந்த பிரயாணிகள் இறங்கி ஆஸ்பத்திரிக்குள் ஓடினார்கள். பாதுகாப்புக்காக மக்கள் கடைகள், வர்த்தக நிலையங்களுக்குச் சென்றனர்.

சுமார் ஒருமணி நேரம் பதட்ட நிலைமை நீடித்தது.

நண்பகலுக்கு பின்னரும் சன நடமாட்டம் இருக்கவில்லை.

## மோசடி---

(1-ம்பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

ஏமாற்றி பணம் பறிக்கும் ஏஜென்சிகளுக்கு 6மாத சிறை தண்டனையும், பெறப்பட்ட பணத்தொகைக்கேற்ற அபராதமும் விதிக்கும் வகையில், இதற்கான சட்ட மூலத்தில் விரைவில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது.

## ஊர்காவற்...

[1-ம்பகக-5ம்கலத்தொடர்ச்சி)

காசாளரிடமிருந்த தஸ்தாவேஜுகளையும் கொள்ளையர்கள் கிழித்து எறிந்துவிட்டுச் சென்றனராம்

## தெங்கு பணம் பொருள் சங்கத்திலும் கொள்ளை

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் இருக்கும் ஊர்காவற்றுறைப் பகுதி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவு சங்கத்திலும், தலைமைக்காரியாலயத்திற்கு கட்டவென வைத்திருந்த 75,000 ரூபாவும் இக்கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

## கார்ச்சாரதி----

[1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான யாழ்பாணத்தைச் சேர்ந்த என் இராமசாமியின் மரணவிசாரணை நேற்றுவரை நடைபெறவில்லை,

மரணவிசாரணை தொடர்பாக மேலிடத்திலிருந்து உத்தரவு கிடைக்கவில்லை என்று பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இவரது மரணச் சடங்கு நேற்று புதன்கிழமை காலை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் நேற்று நடைபெறவில்லை.

சடலம் யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (க)


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா சின்னத்துரை

உரும்பராய் தெற்கு வி சின்னத்துரையின் மனைவி திருமதி அன்னம்மா காலமானார் இவர் திருமதிகள் பராசக்தி, தவமணி கருணைரத்தினம் (பிறவுண்ஸ், பரந்தன்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற வை. சீவரத்தினம், சட்டத்தரணி செ. மகேசன் திருமதி அன்னராணி ஆகியோரின் மாமியாரும் ஆவார். பூதவுடல் யாழ்ப்பாணம் வைமன் வீதி, 4 /3 இலக்க இல்லத்திலிருந்து இன்று 7-2-85 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்குத் தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். 1722

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவகுருநாதன்

கொழும்புத்துறை

34, புங்ன்குளம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுருநாதன் (இளைப்பாறிய அரசாங்க களஞ்சிய பொறுப்பாளர்) 6-2-1985 இல் அகால மரணமானார் அன்னார் விரதசாரணியின் (ராணி) அன்புக்கணவரும், செல்விகள் பஞ்சுளா, சித்திரா (Holy Cross College, India), ஷிராணி [சுண்டிக்குளி மகளிர் பாடசாலை] செல்வன் ஷியாம்சரன் [St. Johns College, Jaffna] ஆகியோரின அன்புத் தந்தையும், சிறீ பத்மநாதன் [இளைப்பாறிய வருமான வரி இலாகா]. திருமதி ஜெயசுந்தரம், திருமதி யோகநாதன், திருமதி சேஷ், திருமதி வீரவாகு ஆகியோரின் சகோதரரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று [7-2-1985] பிற்பகல் 12-30 மணியளவில் ஈமக்கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் மற்றும் ஏனையோரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் கொடுப்பவர்: டாக்டர் எஸ். சண்முகலிங்கம் [1723]


இப்பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Telephone number 22389-24126.